

679

679
1·19

FEB 1919

உ

கணபதி துணை.

சிவமயம்.

கானாடுகாத்த நகர்

ஸௌந்தரநாயகியம்மன் பேரில்

மும்மணி மாலை.

இஃது

இராமநாதபுரம் ஜில்லா சிவகங்கை ஜமீனைச் சார்ந்த

புன்னைகவீரபாண்டியபுரமென்கின்ற

மழவராயபுரியிலிருக்கும்

மகா-ள-ள-ஸ்ரீ-சின்னஸாமி அய்யரென்ற

சிதம்பர பாரதியவர்களின் குமாரர்

இராமஸாமி அய்யரவர்களால்

கானாடுகாத்தான் மகா-ள-ள-ஸ்ரீ

கா. அ. மு. காசிச் செட்டியாரவர்கள்

விருப்பத்தின்படி இயற்றப்பெற்று

வெளியிடப்பெற்றது.

வைசியமித்திரன் பிரஸ் பிராஞ்சு.

காரைக்குடி.

1918.

3 679
1.19

உ

கணபதிதுணை.

மும்மணிமாலையின் முகவுரை.

நமது புண்ணிய பூமியாம் பரத கண்டத்துத் தென்பாகத்தில் பண்டைக்காலந் தொட்டே சிறுஞ் சிறப்பும்பெற்று விளங்குவதும், மலையாளம், கன்னட முதலிய பாஷைகளுக்குத் தாய் மொழியாய் அமைந்துள்ளதும் நம் தண்டமிழ் மொழியே என்பது யாவர்க்கும் ஒத்ததொரு முடிபாகும்; இதனாலன்றே மேற்கூறிய தென்பாக முழுவதும் அன்று தொடங்கி இன்று வரை தமிழ்நாடு என்ற சிறந்த பெயரோடு விளங்குகின்றது.

இத்தகைய அருமை வாய்ந்த அமிழ்திற் சிறந்த தமிழ் மொழியதனுள் வழங்கும் நூல்கள் எத்துணையோ பலவுள்ளன. அவை வசன ரூபமாகவும் செய்யுள் வடிவமாகவும் அமைந்தவை. செய்யுள் வடிவிலமைந்த நூல்கள்:— பிள்ளைக்கவி, கோவை, உலா, பரணி முதலாகிய பல பெயர்களையுடையனவாய்த் தத்தமக்கு விதித்த இலக்கணச் செறிவுடன் விளங்குகின்றன.

அவை தம்முள் மும்மணிமாலை என்பதும் ஒன்று. அது:— வெண்பாவும், கலித்துறையும், ஆசிரியமும் ஒன்றன்பின்னொன்று அந்தாதியாய் அமைந்து நிற்க அம்மூவகைச் செய்யுட்களையும் முப்பது வகையில் பாடி முடிக்கப்படுவதொரு பிரபந்தமாகும். (இவற்றுடன் ஆசிரியவிருத்தமும் இணைந்து வருமேல் நான்மணிமாலையாகிவிடும்.) இவ்விஷயத்தை,

"மன்னிய வெண்பா கலித்துறை மன்னர்பா
முன்னியமுப் பான்மும் மணிமாலை—மன்விருத்த
நாட்டிய நாற்பது நான்மணி மாலையா
விட்டியவர் தாறியா யேய்ந்து."

என்னும் வெண்பாவாலும் அறிக.

இம் மும்மணிமாலையை இயற்றியுதவிய இராமசாமையைய ரவர்கள், குஞ்சரமாலை. திருநெல்லிக்காவற் பதிகம் முதலிய நூல்கட்கு ஆசிரியரும்; மழவைச் சிதம்பரபாரதியவர்களின் மூன்றாவது குமாரரும் ஆவார்கள். கற்றல், கற்பித்தல் அரிய உரைகளை இயற்றல் முதலிய பாஷா முன்னேற்றத்துக்குரிய வழிகளில் நூல் இயற்றுதலும் சிறந்ததொரு செயலாகலின், இதுபோன்ற முயற்சிகளில் ஐயரவர்களை ஊக்குதல் தமிழ் மக்களின் கடமையாகும்.

இந்நூல் கானாடுகாத்தான் ஸ்ரீசௌந்தரநாயகியம்மையின் மீது பாடப்பெற்றிருப்பதால், மேற்படி ஊரில் வசிப்பவராகிய மகா-ா-ா-ஸ்ரீ கா. அ. மு. காசிச்செட்டியாரவர்கள் அச்சிடுவித்துப் பலர்க்குங் கிடைக்கும்படி செய்திருக்கிறார்கள். அன்றியும் இவர்கள், அழகிய இரதம் அமைப்பித்து அவ்வூர்ச் சிவாலயத்துக்கு ஸமர்ப்பித்த பெருந்தகையாளருமாவார்கள்.

சிவபுண்ணியங்களிலும் தமிழ்மொழியிடத்தும் பேரன்பு காட்டிவருகிற செட்டியாரவர்களும், நம் ஐயரவர்களும் நீடு வாழ்க இறைவன் அருள்புரிக.

இங்ஙனம்,

சு. சிதம்பரமய்யர்.

148094
சென்னை-600 008.

1782
894.811
7-FEB 1919

உ

சிவமயம்

சாற்றுக்கவிகள்.

புவனேக வீரபாண்டிய புரமென்கின்ற
மழவாபுரியிலிருக்கும்
சிதம்பரமய்யரவர்கள் குமாரன்
சுப்பய்யரவர்களால் இயற்றப்பெற்றது.

அறுசீர்க்கழி நெடில் விருத்தம்.

செம்மணிக்கோ வினமலியும் பணிகளையூ டவிர்த்த
தெருவினூடே
தம்மணிக்கா லமுழுத்தவுன்னி மறுகொதுங்குங் கானாடுகாத்
தானி லோங்கும்
அம்மணியாம் ஸௌந்தரநா யகிக்கணிய வருமறை
யோன் சுப்பராமன்
மும்மணிமாலையை மொழிந்தான் முத்தமி
ழோர் கொண்டாட முறையாய்த்தானே.

Q25:417 .N19

இஃது

வேம்பத்தூர் சங்க வித்வான்களிலொருவராகிய முத்து வேங்கடசுப்பய்ய ரென்ற சிலேடைப்புலி மகா-ள-ள-ஸ்ரீ பிச்சுவய்யரவர்களின் குமாரன் மகா-ள-ள-ஸ்ரீ மகாதேவய்யரவர்களால் இயற்றப்பெற்றது.

வெண்பா.

கன்னல்வயற் கானாடு காத்த நகரிலுறை
அன்னை ஸௌந்தரிமீ தன்பாகச்—சொன்னானிப்
பூமருவு மின்னமுதம் போன்மும் மணிமாலை
மாமழவைச் சுப்பரா மன்.

ஷையார் சகோதரர் மகா-ள-ள-ஸ்ரீ பாஸ்கரய்யரவர்களால் இயற்றப்பெற்றது.

வெண்பா.

காவார்நற் கானாடு காத்த நகருறைமேவார்
நாவார் ஸௌந்தரநாயகிமேற்—பாவார் .
செழித்த வமுதாய்த் திகழ்முமணி மாலை
வழுத்தினான் சுப்பரா மன்.

ஷையூர் வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ சௌந்தரமய்யரவர்களால் இயற்றப்பெற்றது.

வெண்பா.

சுந்தரஞ்சேர் தென்மழவைச் சுப்பரா மப்புலவோன்
செந்தமிழோர் கொண்டாடச் செப்பினான்—ஸந்ததமும்
காட்சிமிகுங் கானாடு காத்தநகர்ச் சுந்தரி மே
லாட்சிபெறு மும்மணிமா லை.

ஷையூர் வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ கோவிந்தமய்யரவர்களால் இயற்றப்பெற்றது.

வெண்பா.

காரார் பொழில்புடைசூழ் கானாடு காத்தநகர்
சீரார் ஸௌந்தரியாம் தேவியின்மேல்—பேரார்சொற்
சூழ்மும் மணிமாலை சொற்றான் மழவைநகர்
வாழ்சுப்ப ராமமதி மான்.

உ

சிவமயம்

கணபதிதுணை

கானாடுகாத்தால் ஸௌந்தரநாயகிபேரில்

மும்மணிமாலை.

காப்பு.

வெண்பா.

மானாடு சோலை வளங்கள் பொருந்துமுயர்
கானாடு காத்தநகர்க் கண்ணிலவும்—மானாடு
மீசர்மகி ழொப்பிலா வின்முமணிமாலை சொல
நேசமெற்கா மத்திமுக னே.

நூல்—வெண்பா.

பொன்மாது மன்பிற் புவிபடைத்தோ னுமருவு
மின்மாதும் போற்றி விளங்குபதத்—தின்மாதா
மொப்பிலா ளம்மை யுனையே பணியுமெற்கு
வற்புதகடாட்சமளித் தாள். (1)

கலித்துறை.

தாளிணை போற்றிடுந் தொண்டர்க் கபயமுந் தண்ணருளார்
வாளிணைக் கட்கடை நோக்கமு மீந்து வருமுமையே
வேளிணை யிற்கர மாமுகம் வைத்து மிளிர்ந்தகொஞ்சித்
தோளிணை யோடணைத் தேத்தும் வழுதித் துரைமகளே. (2)

அகவல்.

களிகொண் டிசைப்பக் கணமொடு மிசையி
னளிமதுத் துளியுண் டலர் மலர்ப்பரப்புற்
றிரு செவிக்குயர்வா யிசைக்கும் வண்டொலியும்
குறையற நறையுணக் குமட்டிப் பறக்கும்
வரிசிறைத் தேனீ வருப்பினெண் டொலியும்
அரிநிறக்கொண் மூ வவையின மெனக்கா

வினமதிற் சுற்றி யிசைக்கும் விண்ணொலியும்
இனும் புட்களினொலி யிசையும் பொங்கர்
வானா டதிற்றன் வளநா டிசைப்ப
மேனாடு வதென விரைந்ததிற் பொருந்தும்
கானாடு காத்த கடிநகர்ச்சிகர
மானாடு கோயில் மகிழவந் துற்றவள்
கைலாசநாதன் களிக்க நின்றருகில்
மெய்யினில்வர்ம மேதகு மிடத்தாள்
ஸௌந்தர நாயகி தயைதச
வுவந்தன் டர்கள்பணி யுலகியற் றுமே (3)

வெண்பா.

தாயெனவுஞ் சேய்க்குநிறை தண்ணகமாந் தாய்க்குமொரு
சேயெனவும் வந்துதித்த செய்தியினைத்—தூயமனத்
தாராயுங் காலுன்ற னையல்துதிக் கப்பாற்றே
நேரினில்வந் தேயருளின் னே (4)

கலித்துறை.

இந்நேரமென் றற்றிகலாம் பலவினை யின் றுயசாற்
கன்னே ரகவஞ் சகர்சொல் நிசமெனக் காத்ததினை
லெந்நேரமுந் துயர்க்காகு மென்றற்கவ் விடர்தவிர்த்தாள்
மின்னே ரகத்துறும் வேலனைப் பெற்ற விமலினியே (5)

அகவல்.

மலிமணி பதித்த மாடத் தணிகள்
அலகில் வானுலகிற் கலங்கிருதஞ் செய்வன
போற்றிகழிலங்கள் பொருந்தும் வணிகர்
போற்றுஞ் சிதம்பர விநாயகன் பொற்கழற்
சிரத்தி லோங்கச் சிரத்தையாய்ப் பணிந்தைதங்
கரத்தின னருளாற் கனகமார் பொருள்களும்
பெற்றவ ரப்பொருட் பெற்றதின் பேறு
முற்றிலும் நின்பணி முழுதுறச் செய்வதே
தாமெனக் கருத்துற் றுரிமையிற் செய்யும்
திறமாம்பணியிற் செழிப்புடனு வந்து
கருணைவாரி கன மெனச் சொரிய
வருணலம் பெற்றங் கவர்களிப் புறலென
முக்கணி யுனதருள் முழுது மெற்களித்துப்

பக்குவமன தொடுன் பணிவிடை செய்யும்
பக்தியு மெற்குத் பவித்திடச்
சக்தியுன் மலர்க்கணைற் றயவுடன் பாரே. (6)

வெண்பா.

பார்க்குமிட முனது பங்கயத்தா ளல்லதுவே
றேற்கு மொருபதமு மில்லையே—நோக்கமொடுன்
பாதமலர் பணியப்பக்தி யளித்தனையே
வீதமொடென் முன்வருகவே. (7)

கலித்துறை.

வருக வருக வெனக்குகன் றன்னை வரவழைத்துப்
பருகப் பருக வென்முலைப்பால் தரும் பார்ப்பதியே
வுருக வுருக வுனைத்துதி தொண்டெற்குதவுமளி
தருகத்தருகணிட ரொழித்தாளென் றயாபரியே. (8)

அகவல்.

பரிவுடன் பதமலர் பணியுமும் பரையே
வுரிமையிற் காத்தவர்க் குகந்திடும் பரையே
அரக்கர்களிடர் தவிர்த் தமரருஞ் சுகமே
யுறத்தகு மளியளித் தோங்குகிஞ்சுகமே,
மோன முற்றிலங்கிடு முனிகள் வந்தனமே
தானுறத் தவர் மனந்தனிற் பொருந்தனமே
தேனிறைந் திடுமலர் செறி குழற்கனமே
தானெனப் பெறுமணி தழைக்குமோ கனமே
சங்கரர்க் ககமகிழ் சருவு கற்பகமே
தங்கிடத் தொண்டரைத் தாங்கு கற்பகமே
நாயினிற் கடை யெனநடிக்கு மென்றனையே
சேயெனத் திடமொடுந்தேற்றுவந்தனையே
நின்னருள் மழையுண நின்ற சாதகமே
என்னவா ரடியவர்க் கேற்ற சாதகமே
உன்றன் பதமல ரொன்றே
யென்று நினைத்திடவெற் கருள்வாயே (9)

வெண்பா.

வாய்க்கு மிணங்காத வன்கட்சொற் பொய்யுரைத்
தேய்க்குமிழி மானிடர்குற் றேவலினல்—வாய்க்கு
பயனென்சொற் பக்தியொடுன் பங்கேருக
நியமமுடன் போற்றவருள் நேர். (10)

கலித்துறை.

நேராமிருவிழி கட்கு ஞயர்விட நேருமெனப்
பாரோருரைத்திடும் சொற் பொய்யதாக்கிப் பகருனரு
சீரார்விழிக்குட் கருணையமுதஞ் சிறந்துபொங்கும்.
நேரா மழுதவர் கட் கண யாலருள்நித்தமுமே. (11)

அகவல்.

நித்திய வத்துவின் னின்னயத்தினையே
சத்தியவுரையிற் சாற்றிடக்குலவும்
நான்கு வேதங்களும் நவின்று கோஷிக்கப்
பாங்குட னமர்த்து நற்பாடசா லைகளும்
அறுதொழிற் புரிவ ரந்தணர்க் குரியதாய்
சருவுமோ ரிலங்களைத்தா னமைத்தவர்கட்
கன்னவத்திரங்களு மளவிலா தளிக்கத்
தன்மமே தழைத்தவர் சாருமோர கரமும்
மோனமாம் வத்துவின் மூலமீதே யென
மோனமாய்த் தவஞ் செயு முனிவர்கள் மடங்களும்
உன்பணிக்கரு கிருந்துனைத் தினந்தொழுதுறப்
பம்பிநற் றெண்டுடன் பணிந்திடும் வணிகர்கள்
அமைத்திடு மரண்மனை யலங்கிருத மெனத்திகழ்
சமைத்த வோரிலங்களுஞ் சார்ந்தவந் நகர
மத்தியில் ஜோதியாய் வாய்த்திடும்
சத்தி யெற்குனதருட் டயையுடன் தரவே.

வெண்பா.

காளநிறம் பச்சைநிறஞ் சார்ந்திவரு மீச
னுருவுன் னுருவுமொன்று யோங்கப்—பரணுமுறப்
பச்சைநிற விண்டுருவைப் பார்ப்பதிநீ கொண்டதிலோ
யெச்செகமுங் காக்கும்வகை யே. (13)

கலித்துறை.

வகை தொகை யொன்றுந் தெரியாதஞ் ஞானமயக்கவிருட்
பகையெனை யாழ்த்திமே லேறவிடாதுறு பாதையினற்
றிகைவுறு மெற்குமெய்ஞ் ஞானவொளி யித்தினமுதவிச்
சுகமுறக் காத்தருள்செய் வாயரன் மகிழ் சுந்தரியே. (14)

அகவல்,

கைலாஸத்திற்கும் கானாடுகாத்தானிற்கும் சிலேடை.

சுந்தரஞ் சேர்ந்திடும் ஜோதியாய் விளங்கு
மந்தர மேலா யமர்ந்திடுஞ் சீராய்
கற்பக நாட்டுக் கனதையென் றணியாய்ச்
சொற்புல வோர்துதி சொலுந் தரமாக
யென்னரு மறையொலி யெங்கணு மொலிக்கத்
தண்ணகத் திருந்திடும் சாதக நிறைந்திடும்
மானுயர் வனத்துறை மந்திரந் திகழத்
தீனருக் களியளித் திடுமணி விளங்கிட
நந்தா வனத்துறு நறுமலர்த் தடமும்
சிந்துர மாமுனும் தேர்ந்திடும் வீடுற
யிப்புவி கட்குமீ தேகயி லாயமென்
றற்புத மாக வமருமிந் நகரம்
சிவகங் கையெனுஞ் சீர்மையை மேலா
யெவரு மறிந்திட வேற்றிடும் பதியின்
கோவிலா யோங்கக் குவலய மகிழ்வாய்
மேவிட நகர மினும்பணி விடையுறக்
கந்தரத் தோங்குங் காத்திட மையுறும்
விந்தைபாற் கயிலையின் மேவிடு நாகனும்
என்றுமித் தலத்திலே யீசனம் மையையும்
என்றுமே பூசித் திடவெணி நாக
ராஜனு முவந்து நலமொடு சிறந்து
வாஸனை துறந்து மனத்தொடு புகழ்ந்து
கைலாஸ நாதன் கழலிணை விநோதச்
சைவலக் குழலாள் சங்கர னிழலாள்
ஸௌந்தர நாயகி தனையுமே பூசித்
தவந்தனை நீக்கி யகமகிழ் தேககி
நாகதீர்த் தத்தட நலமெனப் பெயரொடும்
வாகுறுந் தடாக மருவிட வமைத்தந்
நாளினில் நாக ராஜனும் பணியும்
வேளையி லெனும்வரம் வேண்டுவ வளித்துக்
காத்திடும் சங்கரி கருணையாய்
ஏத்திடும் வரங்க ளினிதளிப் பாயே

7-FEB 1919

வெண்பா

பாயும் புலியாய்ப் பசுமுன் சனுருவ
மேயுங்கோ கர்ணத்தி னிற்கதந்—தாயோடுகன்
றைககலக்கச் செய்ய வாளுக் கினிதுரைக்கு
முக்கணியுன் றற்கிணையா மோ (16)

கலித்துறை.

ஆமோ தகப்ரிய மாமுகன் றன்னை யரவணைத்து
மாமோ தகத்துடன் கொஞ்சி வளர்த்திடு மன்னையென்றற்
காமோ தகத்தை யுனதிடஞ் செல்ல வருள்வைமலர்க்
காமோ தகமுறுங் கானாடு காத்தந கர்க்கமுதே (17)

அகவல்.

அமுத மலர்க ளணிந்திடுங் குழலுங்
குமுத வாயுங் குவளைநேத் திரமும்
பங்கஜ முகமும் பகர்ந்தசொற் சுகமும்
சங்கமார் தரமும் தரித்தகந் தரமும்
வள்ளைக் குழையு மணியணி தழையும்
பிள்ளைக் குமரன் பேணி யருந்திடத்
திதிக்கும் பாலுந் திரண்டுமேக் காலு
முதிக்குந் தனமு மூட்டிடு மனமும்
அன்பர்கட் கபய மளித்திடக் காட்டு
மம்புஜக் கரமு மளித்திடும் வரமும்
தஞ்சமென் றுன்னைச் சார்பவர் தமக்கு
மஞ்சலஞ் சலெனவு மறைகல்போ லொலியும்
திகழுஞ் சிலம்பும் நிறைந்திடும் கழல்களும்
புகழும் தொண்டர்கள் போற்றிடுந் துதியும்
எக்கா லத்திலு மினிதுறும்
தக்கன் சேயே ஜயந்தரு வாயே (18)

வெண்பா.

தருவாய்க்குந் தண்கனிகள் சான்வாய்க்குந் தேனு
மருவாய்க்கு மாமலரும் வாய்க்குந்—திருவாய்க்கும்
கானாடு காத்தநகர்க் காரணியே நாரணியே
தீனனெனைக் காத்திடுவந் தே (19)

கலித்துறை.

தேனாறுங் கொன்றை மலர்நாறு மாமதிச் செஞ்சடையில்
வானாறும் பொங்க வதில்நாறு மாமறை மத்தியினில்

தாறுறு மின்பொறி தங்கச் சரவணத் தைதச்சருவப்
பாறுற வின்றவ் வறுமுகற் காத்த பராபரியே (20)

அகவல்

பரிதி யொளியிடப் பரவிட மலர்ந்து
கருது மதியொளி கலந்திட முகிழ்க்கு
மரைமல ரொத்திட மணமரை மின்னவர்க்
குரியமாமுகமதி யொளியினால் முகிழ்க்க
வுனதடி யம்மல ரொருங்குட னமைக்கக்
கனவிலு முதவாக் காரணங் கண்டேன்
அம்மையே நினதிட மமர்ந்திடும் ஞான
மெய்ம்மையாம் பாற்கர மின்னொளி விடுத்திட்
டம்மரை மலர்ந்தன தடியினை பரவ
வெண்முளம் வந்தரு ளிருகையு மான்மழுத்
தாங்கிய சசிதரன் றன்வலப் பாகத்
தோங்கியே களிக்க வும்பர்க ளினமெனச்
சுற்றிலும் பூசுரர் துலங்குமோ ரகரமும்
மற்று மரிகரன் வளர்ந்திடுங் கோயிலும்
பொருந்த விளங்கும் பொற்கழல்
திருந்தும் ஸௌந்தர தேவியின் னொளியே (21)

வெண்பா.

மின்னொளியுந் தோன்றி விலகுமிட மேவுகொண்ட
லென்னவுறும் வாழ்க்கை யெனுமின்னல்-மன்னிவரு
மெற்குணளிக் கொண்ட வினையளித்துக் காக்கநித
மிக்குமொழி மிக்கமுத மே (22

கலித்துறை.

முதந்தரும் சாகரத் துட்கடை யின்ன முதமும்விட
மதந்தரும் வானடைச் சந்திர னின்னருள் வாரிதிநே
ரிதந்தருங் கட்கடை யிற்றரு மின்னமு தேயுதவு
சிதந்தரு நன்மதி மானென்றோ சென்னியிற் சேர்த்தனையே(23)

அகவல், கோவில் உற்சவ மகிமை

அனையுரு வினையு மருளுரு வினையும்
புனிதமா யெவரும் போற்றிட விவரும்
தனிகர்கள் கூடித் தழைத்திட நாடிக்
கனிவுட னிறைந்த கனதையும் பொருந்தப்
பன்னிரு மாதமும் பலபல விநோதமும்

மன்னிடத் திருநாள் மகிழ்ந்துமெச் சிடுநாள்
மிகுனமா மதியில் வேண்டியும் விதியில்
தத்தியதிற் றுவஜ ஸ்தம்பமு நாட்டி
மகரதோ ரணநடு மத்தியிற் கணவுடு
மிகவிணங் குவடுென்ன விளக்கொளி களின்கன
மேன்மையுஞ் சேர்த்து விண்ணிலா வார்த்தும்
வானிருந் தித்தரை வந்திடச் செயுநிறை
நிறையாய்ப் பலமதி நேர்ந்திடச் செயுமதி
விரைவுட னுக்கும் விதமென நோக்கும்
காந்த விளக்கொளி களைநிறைத் திடவெளி
யார்ந்தவிண் ணுலகு மதிஞெளி யிலகும்
மண் ணுல கிற்கும் மற் றுல கிற்கும்
விண் ணுல கிற்கும் விளங்கிட நிற்கும்
முரசொலி முழவொலி முழங்கிடும் பரசொலி
அன்றந்திடக் கூடு மனைவரும் நாடும்
முன்னுள் முதல்வரு முறையே வழியுறும்
பன்னு ளிலுமணி பரிவாய் நிறையணி
காம தேநுவுங் கற்பக விருட்சமும்
நேமமாம் கயிலையும் நிகழ்ந்திடு நந்தியும்
சிங்கமும் யானையுஞ் சேர்த்திடு மன்னமும்
எங்களாய் யன்கழ லிணைதொழு மிடமும்
ஆனவா கனங்க ளதனிலத் தினங்கள்
மேன்மையா யிருந்து விளங்கிடப் பொருந்தும்
தந்தையுந் தாயுந் தானமர்ந் தேயும்
ஸுந்தரன் ஸுந்தரி தோன்றிடும் பவனியில்
வெண்டிரை யிருபுரம் வீசுவ வெனவுறும்
தொண்டர்கள் சாமரை துலங்கிட வேமறை
யொலிபல வியங்க ளொலியுமே தியங்கப்
பலஸங் நாகம் பரவு மநேகம்
நலம்பெறு ஸௌந்தர நாயகி ஸந்நிதி
யிலங்கிட நித்த மியைந்திடும் சுத்தமாம்
தம்புரு மிருதங்கமும் தஞ்ஜல தரங்கமு
மின்பமார் பிட்டிலு மிசைந்திட மட்டிலா
வீணைவாத் தியமும் வேணுவாத் தியமும்
காண்பவர் மகிழ்ஸுர கத்துவாத் தியமும்
இயைந்தலங் கீத வினிய விநோத
ஜயந்தரு ஸுரத்தொடங் நாட்களில் விளங்கப்

பக்தியைத் துலக்கிடும் பான்மையு மளித்துச்
சுத்தஸங் கிதத் துடனுமெக் களிக்கப்
பகவத் பக்தர்கள் பணிந்துமே செய்துறும்
நிகமத் தொடுகதை நிகழ்ந்திடும் சுதையும்
பொன்னுல காமிதிற் புகழுமிந் திரர்களு
மன்னிய குபேர வான்களு மெனவுறும
தனிகர்கள் தொண்டர்கள் தானமர்ந் திறைவபல
நனியுறுங் காட்சிகள் நாடியெக் களித்திடும்
வேளையிற் பலவாம் விந்தையே பொருந்தும்
வாளிணைக் கட்கடை வாய்த்துமே திருந்தும்
அரம்பையர் களும்பல வணிதிலோத் தமைபல
அரம்பையார் குறங்கிணை யணியுமே னகைபல
வுருவின ரென்று முறைத்திட நின்று
மருவிடத் தேவ மாதர்க ளாவ
லோடுமே நர்த்தன மோங்கிடச் செய்மன
நாடிடுங் கனியோ நற்கனி யமுதோ
பாலோ தேனோ பாகுசர்க் கரையோ
மேலா யினிக்கு மேம்படு கண்டோ
வென்றுமே தோன்றிட வின்னிசை கான
மன்றுநாட் செய்தங் கமர்ந்திடு மணியும்
நறுமலர் மரையென் னுளுமே நிறக்கும்
திருவுரு நாக தீர்த்தமுஞ் சிறக்கும்
தெப்போத் ஸவமும் தெரிசனை செய்பவர்க்
கற்புதக் காட்சி யளித்திடுங் கிருபையொடு
மேகாந்த ஸேவையு மின்புரு பார்வையும்
வாகுறுந் தொண்டர்கள் மனமது களிக்கத்
தந்திடுஞ் சாமளை தயையுடன்
வந்தெனைக் காத்து மனமகிழ் வாயே. (24)

148094
சென்னை-600 008.
O25;417
N18

வெண்பா,

வாயிருக்கு நான்குவித மாமிருக்கும் போற்றிவனத்
தேயிருக்குந் தாபதர்நெஞ் சேயிருக்கும் நீயிருக்க
என்மனத்தில் வேண்டு மிடமிலையா வந்தருள்செய்
நன்மைபெறச் சுந்தரியின் னுள் (25)

கலித்துறை

நாளோ சிறிதந்த நாளிலும் வீணில் நடித்துனது
தாளோ தொழாது தயையோ பெறுது தனித்தமையற்

ஈக்கும் வல்வினை யெற்கணா காதென தம்மணிநின்
ளார் விழியருளீந்தெனைக் காத்திட நேருமையே (26)

அகவல்.

ஐமக்கரம் களத்தில் வைத்திடு மாணார்
மெய்க்குநல் லணியும் விளங்கிடு மணியும்
அணிந்தஸாங் கரியுனை யரையுடம் பாக்கித்
தணிந்திட மெய்யிற் றரித்திடச் செய்தும்
ஜடவுரு வத்தாற் சிறுங் குணனாய்ப்
படபடத் தோடிப் பயமுற நாட்டி
யந்தர மாயுறு மணிகங் கையைப்பெறும்
தந்தலை மேலே தாங்கின தாலே
ஸகளத் தியவட் டலைமே லேறிட
வகமது பொறுக்கா வச்சினங் நாடி
தக்கனு மகத்திற் றயங்கிடச் செய்ய
மிக்கவோர் வழியினை விடுத்தான் றனைவிடுத்
தசலமா மலைமக ளாகி யிருக்கச்
சசிதர னுனைவிடத் தாங்கவொண் ணாமல்
உலகெல்லாந் தெரியா துருவரு வாகிக்
கலைகளுங் குறைந்து களங்கமு முற்ற
சொற்ப மதிமான் றனையெனக் கொண்டும்
பற்பல வுலகம் பகர்ந்திடும் பித்தனாய்க்
கூத்து மாடிக் குவலயம் நடுங்க
வேத்து மயான மிலமென வடைந்து
சின்னா னிருந்தச் சினமெதன் வழியெனப்
பன்னகா பரணன் பரிவுட னறிந்திடத்
தன்கையி னுடுக்கைத் தானே யெடுத்து
நன்குறுங் குறிகளை நாடியே பார்க்கத்
தலையில்நீர்க் கொண்ட தன்மையி னாலத்
தலைநீ ரிறங்கிடிற் சவுக்கியம் பெறுவான்
என்றுன் மனமுறு மெணமென வீசனு
மன்றலை மாதினுக் கறைந்தன னீகே
தலைமேற் கொண்டதாற் றலைகீழ் விழுந்தனை
தலைகீழ் வீழ்ந்தித் தரையினிற் புரண்டு
மிரவும் பகலு மெங்கணு மலைவாய்
உருவா யமர்ந்து மோலமிட் டலறி
முனிவாய் வருவாய் முனியின் சுருதிக
ளினின்வா யிருந்து மிப்புவி யோகம்

பொறைகள் சுமந்து புரண்டுவாய் நுரைகள்
தரையினிற் கக்கத் தகரவு மிடங்களில்
பாயுங் குணமாய்ப் பறந்துமெங் கனுமுறச்
சாயு மிடங்களைத் தகர்ந்திட விடுத்து
வாழ்ந்த வகத்துட னசலத் துவந்தும்
தாழ்த்திடும் ஜலமாம் தனிக்குரை முற்றும்
இருக்கும் செயலினை மீயற்றிடச் செய்தான்
தருக்குட னுவர்க்கடல் தனிநீர்க் கங்கையை
யாழ்ந்திடச் செய்திடு மரன்செயல் கண்டு
தாழ்ந்திடு மறியொடு தாயுன் மனமகிழ்ந்
தைமுகன் றன்மால ரடியினை பணிந்து
மெய்ம்மையா யத்தன் மெய்யினிற் சேர
வக்கயி லையைவிட் டனைவரு மெளிதிற
றக்கவுந் தொழவெணித் தக்கிணை கயிலையாம்
காணுடு காத்த நகர்க்கு ளமர்ந்து
வானு மொளியும் மலரும் மணமும்
பண்ணு மிசையும் பாலும் சுவையும்
எண்ணுமைந் தெழுத்து மியற்கைச் செயலென
வன்னையாம் ஸௌந்தரீ யப்பனும் ஸௌந்தரற்
கின்னமு தளியென வின்சொற் பகர்ந்தே
யிருவரும் சேர்ந்திங் கிப்புவி யெப்புவி
யுறுமா னவர்க்கு மும்பர்க ளெவர்க்கும்
அரக்க ரசுரர்க ளவர்கள்மற் றிகல்களும்
திறத்துடன் செயுமுபா திகளை நம் முன்னில்
முறையிட யிகற்குல முழுதையுந் தொலைத்துத்
தரையில்மற் றுலகிலும் தங்குடி தழைத்துக்
குன்றுக் குடியாய்க் குலங்களும் பிழைக்கக்
குன்றுக் குடியிற் குமரனைப் பெற்று
சூரக்குடியினைத் தொலைவிலா வடக்கு
மாறுநின் றஞ்சு மயிலா யமர்த்தி
யசுரர்மற் றிகற்குல மாங்கிலா தடித்துத்
திசையில்வீற் றிருக்கும் செயலினைக் கண்டு
வரிசையாய்ச் சுரர்களும் வளர்பூ சுரர்களும்
இந்திரன் குபேர னென்னவிந் நகரத்
துந்தர மாகத் துலங்கிடும் தொண்டரும்
பணிந்துங் களைத்தொழும் பணிவிடை செய்யத்
துணிந்தவர் தொழுதிடுந் தாத்திற் கிணங்கித்
தனுகன வாகன ஸம்பத் தொடுநின

மண்மகிழ் கல்வியு மக்கட் செல்வமும்
நித்திய முனைத்தொழு நிகரிலாத் தொண்டும்
நத்தியு மளித்தவர் நலமொடு களிக்கச்
செய்யுங் கிருபாகரி தேவ மனோகரி
செய்ய குணாலி திருமறை வேலி
ஸுந்தரி மந்தரி துங்க நிரந்தரி
யந்தரி நாரணி யகிலஸு காரணி
தானவ சங்கரி ஸாது வசங்கரி
மோன கரிமறை மூலவோங் காரி
தத்துவ ஸ்வரூபி ஜயசித் ரூபி
நித்திய கௌமாரி நிரந்தரா காரி
மான பரணே மஞ்சுள சரணே
தீன தயாபரி ஸ்ரீதரி சுபகரி
சஞ்சலந் தவிர்த்துத் தயையேற்கு
மெஞ்சலி லளித்திங் கெனதிட மிருப்பையே (27)

வெண்பா.

ஏகமுமாய்ப் பாதியுமா யெண்ணுருவோ டின்பமுறும்
தேகமுமாய் முக்குணமேற் சேருமொளி யாகவும்நேர்
நீயோ ரிலக்கத்தும் நின்றிடவும் காண்கிலன்யான்
மாயை யெனச் சொல்லவொண்ணு மா (28)

கலித்துறை.

மானேர் குழலு மறைநேர் முகமும் வனத்திலுறு
மீனேர் விழிகளு மின்னேரச் சேர்ந்து மிளிர்ந்து நிகழ்
வானே ரிடையு மதுநேர் மொழியு மருவனையே
பாநேர் துதியொடு முன்றனைப் போற்றும் பணியருளே (29)

அகவல்.

அருள்நிறை விழியி னமுதம் பெருக்கித்
தரைவாழ் ஜீவராம் தம்பயிர் தோய்ந்தும்
ஓங்கியே வளர்க்க வுறுங்கிளைக் கிளைகளைத்
தாங்கியே விரித்துத் தழைத்திடச் செய்நிறைக்
கெடுவினைக் களைகளைக் கேடறக் களைந்து
திடநன் மார்க்கமாம் தீங்கனி யுதவி
நான்மறை வேலி நாற்புரத் தமைத்து
யீனமா மறுவகை யிகற்குல மெனச்சொலுங்
கள்வர்க ளணுகக் கவரு வண்ணம்
உள்ளமொத் திருந்திட வகையிற் காக்கும்
கைலாஸ நாதன் களிப்பொடு வாழ்கச்

சைவலக் குழலாள் ஸௌந்திர நாயகி
யன்னையும் வாழ்க வைக்கரன் வாழ்க
மின்வளி குஞ்சரி வேலவன் வாழ்க
தீனரட் சகியமை செழிப்புட னுவக்கும்
கானடு காத்த கடிநகர் வாழ்க
அந்நக ரத்துறு மந்தணர் வாழ்க
மன்னவர் வாழ்க வணிகர்கள் வாழ்க
சைவர்கள் வாழ்க சதுர்த்தராம் நாட்டின
ருய்யவும் வாழ்கமற் றாரினர் வாழ்க
எத்தே வர்களு மினிதுடன் வாழ்க
இத்தல மத்தல மெத்தலத் துந்திகழ்
இம்பர்க ளும்பர்க ளியாவரும் வாழ்க
நம்புமுன் தொண்டரெந் நாளினும் வாழ்க
மாமகிழ்ந் தோங்குமழவைச் சிதம்பர
நாமநற் புதல்வ னற்றமிழ்க் கவிசொலும்
நேமநன்மார்க்கநிறைசுப்ப
ராமன் குலத்தொடெந் நாளினும் வாழ்கவே:

மும்மணி மாலை
முற்றிற்று.

கீர்த்தனம்.

இராகம். ஸாவேரி தாளம் ஆதி

பல்லவி.

பொறுத்தென் பிழையனைத்தும் வருத்தங்கள்தீரக்
கிருபைபுரிந் துனதுகண் பாரம்மா
இந்தப் புவியிலுனக் கிணையாரம்மா

அநுபல்லவி.

அருத்தியா யுனைத்தேடி யரும்பதங்கள் கொண்டாடி
வருக்கமுறவேபாடி வொழுகாவென் றனைநாடிப் (பொறுத்

148094

நாதரூப கைலாஸ நாதன் மகிழ்பிரகாச
ஸ்ரீதரீயுன் விசுவாஸ மேதுமின்றி நான் மோச
மாதர்ளிடம் நேசமேதினம் வைத்துல்லாஸ
வாதனையுற்ற தாஸன்மீதன்புவைத்துப் பேசப் (பொறுத்)
சூதுங்கவடுமுண்டு பூதலத்தினிலண்டும்
பாதகர்களைக்கண்டு பயந்து பணிந்துன்தொண்டு
மேதுஞ் செய்யாமல் மண்டு
காதும் வினைகள் முண்டும் வேதைவிலக்கியண்ட
மாதாவுன் கிருபைகொண்டும் (பொறுத்)
தாமதம் செய்வதேது தயங்கச்செய்யலாகாது
காமன்கணையால் மோதும் கவலைதீர்த்தினிதோதும்
மாமழவை சுப்பராமன்கவிக்கினிதுற க்ஷேமமுதவுந்திறச்
செயலென்று பெறவரப் (பொறுத்)

இராகம் கமாசு தாளம் ஆதி

பல்லவி

ஸாதர மவவிபுத குலஹிதே ஸரள நிகதபர பிருதே

அனுபல்லவி

ஸ்ரீகரசோதரி ஸாதுமனோஹரி
தீன ஜநாவந ஜலதி கிருபாகரி (ஸா)

சரணங்கள்

மந்திரகைலா ஸாதி பஹுரஸுக கரணே விதரணே
ஸௌந்தரநாயகி ஜலஜஸமானஸுசரணே
குந்தஸுமரதனே சந்திரஸமவதனே
நந்திபிருங்கிரிடி முகஹிருதய ஸதனே (ஸா)
மதுகரபீத மதுஸஹிதஸுமகசபாரே
அவிகாரே ஸ்திதிவிஹித ஸகலதிருபுவனபரணவிசாரே
புதஜநரிபுமஹி ஷாஸுரஹாரிணி
போகமோக்ஷஸுக தாயக காரிணி (ஸா)
காமகோடி பீடாதிவாஸ பதஸஹிதேஹரஹிதே
சுப்பராம கிருத மதுர கவிமது மதுகரவிஹிதே
கோமளாங்கினி ஸுதாகரபாஷிணி
க்ரூரபண்ட ஸம்ஹார விகாஸிநி (ஸா)

சாற்றுக்கவி.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	23	ஸௌந்தரி	சவுந்தரி
2	5	ஸௌந்தர	சவுந்தர
,,	19	ஸௌந்தரி	சவுந்தரி

நூல்.

5	29	தேககி	தேக்கி
7	2	வின்ற	வீன்ற
8	21	மிடமும்	மிடபமும்
,,	25	ப	பவனியில்
,,	26	வென	வெனவுனுங்
,,	27	வே	வேடமறை
,,	28	திய	தியங்க
,,	31	சுத்தமா	சுத்தமாம்
,,	33	மட்டி	மட்டிலா
,,	34	இபமு	இயமும்
9	2	கித	கீத
10	9	காட்டி	காடி
,,	13	காடி	காட்டி
12	36	வகையிற்	வஃகையிற்
,,	37	களில்பொடு	களிப்பொடு